# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 1


# இயேசு எவ்வாறு உலக ரட்சகர் ?

பாகம் – 1




Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்



கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

மேற்கண்ட தலைப்பிற்கு 'சிலுவை மரணத்தில் மறைந்துள்ள ஆழமான இரகசியம்" என்றும், அல்லது 'இயேசு எவ்வாறு இவ்வுலகின் மீட்பர் ஆனார்" என்றும் தலைப்பு தரலாம்.

இன்று உலகில் ஏறத்தாழ எல்லா கிறிஸ்தவர்களும் இயேசுவின் பிறப்பை உற்சாகமாகக் கொண்டாடி வருகின்றனர். மேலும் இயேசு இவ்வுலகின் மீட்பர் அல்லது இரட்சகர் என்று ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் எவ்வளவுபேர் 'அவர் எவ்வாறு இவ்வுலகின் இரட்சகரானார்?" என்று தெரிந்து வைத்துள்ளனர் என்பது சந்தேகமே!!



**லூக்கா 2:10,11** இல், கர்த்தர் இவ்வுலகில் பிறந்தபோது தேவதூதன் மேய்ப்பர்களிடம், **'இதோ எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய இயேசு என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்"**

இவ்வசனப்பகுதியில் இயேசுவின் பிறப்பானது எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்குகிறதை கவனிக்கவும். எல்லா ஜனம் என்றால் உலகில் மனிதனாகப் பிறந்த அனைவரையுமே குறிக்கிறதல்லவா!!

**மத்தேயு 1:21** இல், **'அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது**

**ஜனத்தின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்"** என வாசிக்கிறோம்.

எவ்வாறு இரட்சிப்பார்?

மாற்கு 10:45இல், **'அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்"**.

இவ்வசனத்தில் இரு முக்கியமான வார்த்தைகளின் பொருள் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்.

**1) அநேகர் 2) மீட்கும் பொருள்**

**1) அநேகர்**

அநேகர் என்றால் அதிகம்பேர். ஆனால் எல்லாரும் இல்லை என அர்த்தம் கொள்ளலாம். ஆனால் வேதத்தில் இவ்வார்த்தைக்கு எல்லாரும் என்றே பொருள்படுகிறது. எவ்வாறெனில்,

**ரோமர் 5:19இல், 'அன்றியும் ஒரே மனுஷருடைய கீழ்ப்படியாமையினால் அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்"**


இங்கு 'அநேகர்" என்பது 'எல்லோரும்" என்பதையே குறிக்கிறதை கவனிக்கவேண்டும். 1தீமோத்தேயு 2:6இல், **'எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய இயேசு கிறிஸ்து அவரே"**

இவ்வசனத்தில் தெளிவாக'எல்லோரையும்" என்ற வார்த்தை வருவதை கவனிக்கவும். ஆக, எல்லாரும் என்றால் கிறிஸ்தவர்களோ அல்லது யூதர்களோ மாத்திரம் இல்லை . உலகின் அனைத்து மக்களும் அதாவது ஆதாம் முதல் இவ்வுலகின் முடிவுவரை உள்ள ஜனங்களையே குறிக்கிறது.




**2) 'மீட்கும் பொருள்"** என்றால் என்ன?

இவ்வார்த்தைக்கு கிரேக்கமொழியில்' "Anti lutron" ஆகும். இதன் பொருள் என்னவெனில், "Equal corresponding value or price". அதாவது **'சரிநிகர் சமான விலை"** அல்லது **'தகுந்தவிலை"** ஆகும். எவ்வாறு தராசில் ஒரு தட்டில் எடைக்கல்லும் மறுதட்டில் அதற்கு சரியான எடையுள்ள பொருளும் வைக்கப்படுகிறதோ அல்லது ஒரு நகையோ , பொருளோ ஒரு குறிப்பிட்ட தொகைக்கு அடமானம் வைக்கப்பட்டிருந்தால் அதை மீட்க, அதே தொகை செலுத்தினால் மாத்திரமே மீட்கமுடியும்.




ஆக, அநேகரை மீட்கும் பொருளாக வந்தார் என்றால் எவ்வாறு?

**ஆதியாகமம் 1:26,27** இல், தேவன் ஆதாமை சிருஷ்டிக்கும்போது தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்தார்.

தேவனுடைய குணலட்சணங்களை அவனுள் வைத்தார். குறிப்பாக, சுயாதீனமுள்ளவராக (Free Moral Agency)அவரை ஏதேனில் வைத்தார்.

**ஆதியாகமம் 2:16,17இல், 'நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கவேண்டாம். புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்"** என்று கட்டளையிட்டார்



ஆனால் சர்ப்பமானது(சாத்தான்) ஏவாளை வஞ்சித்தபின்(1தீமோத்தேயு 2:14), ஏவாள் அக்கனியை புசித்துவிட்டதை ஆதாம் அறிந்தவராக, சாவைப்பற்றித் தெரியாமல் இருந்தாலும், தேவன் சொன்னபடி தன் மனைவி ஏற்கனவே மரணநிலையில் இருப்பதை உணர்ந்து, அவரைவிட்டுப் பிரிய மனமில்லாததால் அவராகவே அக்கனியை வாங்கிப் புசித்து பாவம்செய்தார் என்று பார்க்கிறோம்.

இப்படியாக ஜீவனுக்கென்று சிருஷ்டிக்கப்பட்ட ஆதாம் இப்போது அந்த ஜீவனை இழந்து மரண நிலைமைக்கு சென்றுவிட்டார். இச்சூழ்நிலையில் தேவன் அவர்களை ஏதேனிலிருந்து துரத்திவிட்டார். அதன்பின்பே அவர்களுக்கு காயின் ஆபேல் பிறந்ததாகப் பார்க்கிறோம். அப்பிள்ளைகளுக்கு ஆதாம்தான் பெற்றிருந்த மரண நிலைமையையே தந்தார். இன்றுவரை பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு இதையே வம்ச வழியாகக் கொடுத்து வருகின்றதைப் பார்க்கிறோம்.

உதாரணமாக, எவ்வாறு ஒரு குடும்பத்தின் தலைவர் நன்முறையில் உழைத்து , நல்ல வருமானம் சேர்த்தால் அக்குடும்பமே வளமாக வாழமுடிகிறது. மாறாக, அந்த தகப்பன் குடிகாரனாக, தன்னிடத்திலுள்ள ஆஸ்தியை அழித்தால் அக்குடும்பமே கஷ்டப்படுகிறதே. அதுபோல , ஆதாமின் சந்ததியே அவர்மூலம் மரணநிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறதை அறிவோம்.




**ரோமர் 5:12இல், 'இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று".**

ஆக, குழந்தைகள் பாவஞ்செய்கிறார்கள் என்றால், அநேகர் இல்லை என்றே சொல்வார்கள். ஆனால் தேவனுடைய

வசனத்தில்,

**சங்கீதம் 51:5இல்,'இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்"**

இப்படியாக, எல்லா ஜனங்களும் எவ்வித நம்பிக்கையுமின்றி பிறந்து, வாழ்ந்து, பின்பு மரிக்கும் நிலைமைக்கு வந்துவிடுகின்றனர்.



இந்நிலைமையிலிருந்து எவ்வாறு மனிதனுக்கு விடுதலை கிடைத்து, நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளமுடியும்.

தேவனுடைய நீதி என்னவென்று பார்க்க, ஒரு முக்கியமான வசனத்தைக் கவனிக்கவேண்டும்.

**யாத்திராகமம் 21:23-25இல்,'வேறே சேதமுண்டானால்.ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குச் சூடு, காயத்திற்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழி கொடுக்கவேண்டும்".**

ஜீவனுக்கு ஜீவன்-- தேவனுடைய நீதியில் கண்டிப்பாகத் தரவேண்டும்.

ஆக, ஆதாமுடைய பூரண ஜீவனுக்கு சரிசமமான ஜீவன் இவ்வுலகில் உள்ளதா என்றால் யாரும் இருப்பதாக வாய்ப்பு இல்லை.

உதாரணமாக, ஆதாமின் பரிபூரண ஜீவனுக்கு 100% தந்தால், அடுத்து அவருடைய சந்ததிக்கு காயீனுக்கு 95% தான் தரமுடியும். அவ்வாறு குறைந்து குறைந்து இப்போதுள்ள நமக்கு%தான் தர முடியும். ஆக, 100 சதவீதம் உள்ள ஆதாம் எங்கே? உலகின் மற்ற ஜனங்களின் நிலைமை எங்கே? நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

ஆக, மனிதனிலிருந்து யாராவது மீட்கும்பொருள் கொடுத்தாலும், கொடுக்க விரும்பினாலும் ஆதாமுக்கு ஈடான மீட்கும் பொருளாகாது.

**சங்கீதம் 49:7,8இல்,"ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி, எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங்கூடாதே".**

ஆகவே, இம்மரண நிலைமையிலிருந்து மனுக்குலத்தை காப்பாற்றுவதற்காக தேவனே முடிவெடுத்தாலொழிய வேறு வழியில்லை.

**ஓசியா 13:14இல்,'அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன், அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன். மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்".**

எவ்வாறு தேவன் மனுக்குலத்தை மரணத்திலிருந்து மீட்பார்?

**யோவான் 3:16இல்,"தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்".**

**1யோவான் 4:9இல், 'தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது "**

இப்போது, இயேசு எவ்வாறு ஆதாமுக்கு சரிநிகர் சமானமான விலை ஆனார். இயேசுவின் ஜீவனுக்கு விலைகொடுத்தால் ஆதாமின் ஜீவனாகிய 100 சதவீதத்தைவிட பல நூறு ஆயிரம் மடங்கு அதிகமானதாக இருக்கிறதே, பின் எவ்வாறு ஆதாமின் ஜீவனுக்கு ஈடாகத் தரமுடியும்? இப்போது தேவன் ஆதாமை எவ்வாறு சிருஷ்டித்தார்? எனப் பார்க்கவேண்டும்.

**சங்கீதம் 8:5,6 இல்,'நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர், மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்"**

எனும்போது, பூமியின்மேல் இராஜாவாக சகல காட்டு மிருகங்களையும் , ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினீர்.



ஏதேனில் சிங்கம், புலி, கரடி போன்ற மிருகங்களும் ஆதாமுக்கு கீழ்ப்பட்டிருக்கும். மேலும் அவருடைய சரீரம் பரிபூரணமானதென்றால், அந்த உடலில் நம்முடைய உடல் போன்று சோர்வு, வியாதி, மரணம் இல்லை. ஒருவேளை ஆதாம் பாவம் செய்யாதிருந்தாரானால், இன்றுவரை அவர் வாலிபராகவே இருந்திருப்பார் என்பதை உணரவேண்டும். தேவன், அவரை சிருஷ்டித்து அதை நல்லது என்று கண்டார் என்றால் எப்பேர்ப்பட்ட

சரீரம் அவருக்கு இருந்திருக்கவேண்டும்.

**வசனம் 5**இல், ஆனாலும், மனிதனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர் என்றால், இப்போது இயேசுவும்கூட பரலோகத்தின் மகிமையை விட்டு தேவதூதரிலும் சற்று சிறியவராக வரவேண்டுமல்லவா !

**எபிரேயர் 2:9இல்,"என்றாலும் தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு"** என்று வாசிக்கிறோம். ஆக, இயேசு அவ்வாறே உலகில் வந்தார்.

உதாரணமாக, நம் அனைவருக்கும் பிடிக்காத ஒரு பூச்சி கரப்பான் பூச்சியாகும். மேலும் அவைகள்




தங்குமிடமும் நமக்குத் தெரியும். அவைகளுக்கும் குடும்பம், வேலை உள்ளதே. அவ்வாறிருக்க கரப்பான் பூச்சி உலகத்திற்கு இரு இரட்சகர் மனிதரிலிருந்து தேவைப்படுகிறது. இப்போது, ஏதேனும் ஒரு மனிதர் கரப்பான் பூச்சியாக அவைகளைப்போல் மாறி இரட்சிப்பு ஏற்படுத்தவேண்டும். நம்மில் யாராவது தயாரா? அல்லது நம்மைவிட வசதி குறைவான மக்களிடம்போய் கொஞ்சகாலம் தங்க வேண்டுமானால், நம் மனது ஒத்துக்கொள்கிறதா? என்றால் இல்லை.

ஆனால், நம் அன்பின் கர்த்தர் பரலோகத்தின் எல்லா மகிமையையும் விட்டு, கரப்பான்பூச்சி போன்ற மனுக்குலத்திற்காக இப்பூமிக்குவந்து, முப்பத்திமூன்றரை வருடம் இருந்தாரென்றால் எவ்வளவு பெரிய மனது அவருக்கு இருந்திருக்கவேண்டும்.

**ஏசாயா 6:8இல், தேவன்,'யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்..." எனும்போது,' இதோ, அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும் என்றேன்"** என்றாரே.

மனுக்குலத்தின் இரட்சிப்பில் கர்த்தருக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி. தன் ஜீவன் போனாலும் பரவாயில்லை, மனுக்குலம் இரட்சிக்கப்படவேண்டுமென்று இங்கு ஆதாம்போல பரிபூரண மனிதனாக வந்தாரே. மேலும், கர்த்தர் இயேசு இவ்வுலகில் வந்தபோது, மனுக்குலம் முழுவதும் விழுந்துபோன சூழ்நிலையில் இருந்தது. இம்மக்களின் பேச்சு, சுபாவம், பழக்கவழக்கங்கள் எல்லாம் அவரால் சகித்துக்கொள்வதற்கு எவ்வளவு கஷ்டம் இருந்திருக்கும் என்பதை யோசிக்கவேண்டும். மேலும், சுற்றுப்புற சுகாதாரம் இல்லாத நிலையில், அவற்றை அவர் சகிப்பதிலும் எவ்வளவு சிரமம். அது மாத்திரமல்ல, கர்த்தர் பேசின எல்லாப் பேச்சுக்களும் பரிபூரணமாயிருந்ததால், மனிதர்கள் அவரைப்



புரிந்துகொள்வதிலும் சிரமம். இவ்வாறு எந்தவகையிலும் கர்த்தருக்கும் ஜனங்களுக்கும் ஏன் சீஷர்களுக்கும் மனதளவிலும், உடலளவிலும் பெரும் வித்தியாசம் இருக்கும்போது, எவ்வளவு கஷ்டம் இருந்திருக்கும். மேலும், பாவிகளின் கைகளில் உபத்திரவம், துன்பம் வாங்கி, கடைசியில் சிலுவை மரணமும் அடைந்தாரே யோசித்துப்பாருங்கள்.

**2கொரிந்தியர் 8:9இல்,'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே. அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே."**

**பிலிப்பியர் 2:7இல்,'தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்".**

நம்முடைய கர்த்தர் கூறும்போது,


**யோவான் 12:32,33இல்,"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்".**

தம்முடைய மரணத்தைக் குறித்துச் சொன்னார் என்றால் என்னபொருள்?

அவருடைய சிலுவை மரணம் பூமிக்குமேல் இருக்கும்போது நடந்ததைக் குறித்து, அம்மரணத்தின்மூலம், நமது கர்த்தர் ஆதாமின் ஜீவனுக்கு சரிசமானமாக தம்முடைய ஜீவனை மீட்கும் பொருளாகத் தந்தார் என்று அறிகிறோம்.

ஆக, ஆதாமின் ஜீவனுக்கு இணையான மீட்கும்பொருள் கொடுக்கப்பட்டால், அகில மனுக்குலத்தையே மீட்பதற்குச் சமம். அதினால்தான் ஒரு மனிதன்மூலம் இச்சந்ததி முழுவதும் வரவேண்டும் என்பது தேவனுடைய திட்டம். என்ன ஆச்சரியமான விஷயம். இவ்வாறு இயேசுவின் பலிமூலம் நடப்பது என்ன?

**1கொரிந்தியர்15:21,22இல், 'ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்".**



எப்பேர்ப்பட்ட இரட்சகர் நமக்கு தேவன் தந்துள்ளார்!!

ஆம் சகோதர சகோதரிகளே, இழந்துபோன ஜீவனை உலகின் மக்கள் அனைவரும் பெறப்போகிறார்கள்.

இயேசுவின் ஈடுபலி முடிந்து 2000 வருடம் ஆகிவிட்டதே. ஏன் இன்னும் ஜனங்களுக்கு உயிர்த்தெழுதல் நடைபெறவில்லை? இதுகுறித்து மீட்கும்பொருள் பாகம் 2இல் காணலாம்.

தேவனுடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக, ஆமென.

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/